2025-ஆம் ஆண்டிற்கான

‘சிறந்த திருநங்கை’ - ரேவதி மற்றும் திருநங்கை பொன்னி ஆகியோருக்கு விருது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஏப்.17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் 2025ஆம் ஆண்டிற்கான ”சிறந்த திருநங்கை விருதினை” நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை ரேவதி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பொன்னி ஆகியோருக்கு திருநங்கைகளின் நலனுக்காக அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி வழங்கினார்.

திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத் திட்டங்கள் பெண்களைப் போல மூன்றாம் பாலினத்தவரையும் சமுதாயம் மதிக்கும் வகையில், அவர்களை கண்ணியத்துடன் அழைக்க வேண்டும் என்னும் எண்ணத்தின் வெளிப்பாடாக “திருநங்கை” என்ற மரியாதைக்குரிய சொல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப் பட்டது.

திருநங்கைகளுக்கு முழுமையான சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அங்கீகாரத்தை வழங்கி அவர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் நல வாரியம் 15.04.2008ல் சமூக நலத்துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது இந்நல வாரியமானது 2.04.2025 அன்று திருத்தியமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா, மருத்துவக் காப்பீட்டு அட்டை, தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடங்கிட மானியம், சுய உதவிக்குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்தல், தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற திருநங்கை களுக்கு மாதம் ரூ.1500/ வீதம் ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர்கல்வி பயின்றிட கல்விக் கட்டணம், விடுதி கட்டணம் மற்றும் அனைத்து கட்டணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மற்றொரு முயற்சியாக, திருநங்கைகள் சமூகத்தின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும், உயர்கல்வி கற்கும் திருநங்கை களை ஊக்குவிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் 1000 ரூபாய் ஊக்கத் தொகை இனி திருநங்கையர்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவுபடுத்த ப்பட்டுள்ளது.

மேலும், அவர்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கில், முதற்கட்டமாக சென்னை, ஆவடி, தாம்பரம் மாநகர ஊர்க்காவல் படையில் திருநங்கையினரை பணியமர்த்த தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இந்த முன்முயற்சிகள் திருநங்கை களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதிலும், அவர்களுக்கு சமூகத்தில் சமமான அங்கீகாரம் கிடைப்ப திலும் முக்கிய பங்காற்றுகின்றன.

சிறந்த திருநங்கை விருது - 2025

தமிழ்நாடு அரசு திருநங்கைகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் குறிப்பிடத்தக்க முன்முயற்சியாகவும், அவர்களை சமூகத்தின் முக்கிய பங்களிப்பாளர்களாக அங்கீகரித்து சிறப்பிக்கும் விதமாகவும் 2021 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் “சிறந்த திருநங்கை விருது” வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதானது திருநங்கைகளின் நலனுக்காக அயராது பாடுபட்டு, சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழும் திருநங்கை ஒருவருக்கு வழங்கப்படுகிறது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவால் தேர்வு செய்யப்படும் இந்த விருதாளருக்கு, திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15-ஆம் நாளில் விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

இந்த விருதினைப் பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காசோலையும், அவர்களது சேவை மற்றும் சாதனைகளைப் பாராட்டும் விதமாக சான்றிதழும் வழங்கப்படுகிறது. இந்த விருதானது திருநங்கை சமூகத்தின் உன்னதமான சாதனைகளை அங்கீகரிப்பதோடு, அவர்களது சமூக முன்னேற்றப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

அந்த வகையில் தனது சொந்த உழைப்பாலும், தனித் திறமையாலும் முன்னேறி, பல திருநங்கை மக்களின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து வரும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை அ. ரேவதி என்பவரின் சிறந்த சமூக சேவையைப் பாராட்டியும், திருநங்கைகள் தங்களது அயராத முயற்சியால் கல்வியிலும், கலையிலும் சிறந்து விளக்க முடியும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை க.பொன்னி என்பவரின் சிறந்த சமூக பங்களிப்பைப் பாராட்டியும், தமிழ்நாடு அரசின் 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது மற்றும் தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. ஆர்.லில்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வாழைக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த இரா.கலைச்செல்வன் அவர்களின் மகள் க.கதிர்செல்வி, கடந்த ஆண்டு நடைப்பெற்ற, தமிழ்நாடு தேர்வாணையம் நடத்திய குரூப் 1 தேர்வில், மாநிலத்தில் முதல் இடத்தில் வெற்றிபெற்றார். இந்நிலையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை சந்தித்து வாழ்த்துகளை பெற்றார். க.கதிர்செல்விக்கு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சால்வை அணிவித்துவாழ்த்துத் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்வு!

நயினார் நாகேந்திரனுக்கு - முதல்வர் வாழ்த்து!

சென்னை, ஏப்.17-

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நயினார் நாகேந்திரனுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - நேற்று முன்தினம் சட்டப் பேரவை விவாதத்தின் போது தமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்.

தம்மை வாழ்த்திய முதல்வருக்கு நயினார் நாகேந்திரன் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அவ்விவாதம் வருமாறு: -

முதல்வர் மு.க.ஸ்டாலின்: பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய நம்முடைய நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முதல்வருக்கு நன்றி!

அவர் இங்கே பேசத் தொடங்கும் போதே என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால் என்று சொல்லி விட்டுதான் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் பெரிய பிரச்சினை ஆக்க வேண்டிய அவசியமில்லை.

பேரவைத் தலைவர்: உறுப்பினர் நயினார் நாகேந்திரனுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

நயினார் நாகேந்திரன்: முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது இன்று, நேற்றல்ல. கொரோனா காலகட்டத்திலிருந்து எல்லா காலங்களிலும், நான் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்திலே கூட தொலைபேசியில் என்னை அழைத்து “எப்படியிருக்கிறீர்கள், நன்றாக இருக்கிறீர்களா, உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நேற்றுகூட, தொலைபேசியில் அழைத்து அவருடைய வாழ்த்தைத் தெரிவித்தார்கள். அந்தப் பெருந்தன்மையை இத்தகைய ஒரு நாகரீகமான அரசியலில் நான் உண்மையிலேயே மனதாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். .

அமைச்சர் தங்கம் தென்னரசு: இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் உறுப்பினர் அண்ணன் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு நினைவு மிக சரியாகவே இருக்கிறது என்பதை நான் உணர்ந்துகொள்கிறேன் (சிரிப்பு).

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

முதலமைச்சர் அறிவித்த

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2ஆம் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும்!

சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

சென்னை, ஏப். 17-

முதலமைச்சர் அறிவித்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2 ஆம் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இது குறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஜி.கே. மணி: தவித்த வாய்க்கு தண்ணீர் வேண்டும். தாகம் தீர்க்க தண்ணீர் வேண்டுமென்கிற அடிப்படையில் மிக வறண்ட மாவட்டங்களாக இருக்கிற தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2 ஆம் திட்டம் வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை பல முறை வைத்தோம். அமைச்சர் அவர்கள் நீங்களும் நேரடியாக பார்வையிட்டீர்கள். (குறுக்கீடு)

முதலமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டு, திட்டம் எல்லாம் தயாராக இருக்கிறது. எல்லாம் தயாராக இருக்கிறது. நிதியும் 7891 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறது. அடிக்கடி நீங்களும் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். நாங்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆகவே, இந்தாண்டு மிக விரைவாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா, ஏனென்றால், எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் போகவில்லை. சில ஊர்களில் ஒரு மணி நேரம், அரை மணி நேரம். . .

அமைச்சர் கே.என்.நேரு: அது ஜல் ஜீவன் திட்டத்திலே ஒன்றிய அரசிலிருந்து கிடைக்கக் கூடிய நிதியும், மாநில அரசினுடைய பங்காக இருக்கிற நிதியும் இரண்டுமே அதற்காக கொடுக்கப்பட்டுவிட்டது. 8 ஆயிரம் கோடி ரூபாய் கிட்டத்தட்ட, 10 கோடி ரூபாய் குறைவாக, 8 ஆயிரம் கோடி ரூபாய். அந்த 8 ஆயிரம் கோடி ரூபாயில் JICA விலே நாம் கடன் கேட்டிருக்கிறோம். அவர்கள் சில condition போட்டிருக்கிறார்கள். இன்னும் 2 மாதங்கள் ஆக வேண்டும், 3 மாதங்கள் ஆக வேண்டுமென்று அப்போதுதான்—ஜூன் மாதம் 25 ஆம் தேதிக்குள் அதை முடித்துத் தருவதாக, ஒப்புதல் தருவதாக JICA நிறுவனத்திலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, கடன் தருகிறவர்கள் அவர்களுடைய priority என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்கள் இவ்வளவு நாட்கள், இவ்வளவு மக்கள் தொகை என்றெல்லாம் கணக்கு பார்க்கிறார்கள். அந்தப் பணிக்கு ஜூன் மாதம் 25 ஆம் தேதிக்குள் கையெழுத்து போட்டு தந்துவிடுவோம் என்று உறுதி கொடுத்துவிட்டார்கள்.

ஜூன் அல்லது ஜூலைக்குள் அது tenderக்கு வந்துவிடும். நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம் உறுதியாக அது நிறைவேற்றப்படும். அதுவும் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம் முழுவதும் அந்த குடிதண்ணீர் செல்லும்போது மிகச் சிறப்பாக அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இராயபுரம் — மன்னார்சாமி கோவில் தெருவிலிருந்து

டோல்கேட் வரை மேம்பாலம் - அரசு முன்னுரிமை அளிக்கும்!

சட்டப்பேரவையில் — அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, ஏப்.17-

இராயபுரம் தொகுதி மன்னார்சாமி கோவில் தெருவிலிருந்து ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள டோல்கேட் வரை மேம்பாலம் அமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையினை அரசு முன்னுரிமை அளித்து செயல்படுத்தும் என, சட்டப்பேரவையில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, கேள்வி நேரத்தின் போது பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஜட்ரீம் இரா. மூர்த்தி: இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், மன்னார்சாமி கோயில் தெருவிலிருந்து ஆர்.கே. நகர் வரை இருக்கின்ற சூரியநாராயணன் செட்டி தெரு வரை உள்ள 3 கி.மீ. தூரம் திருவொற்றியூர், எண்ணூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி வழியாக சென்னைக்குள் நுழையக்கூடிய அனைத்து வாகனங்களும், சூரியநாராயணன் செட்டி தெரு, மன்னார்சாமி கோயில் தெரு வழியாகத்தான் Parry’s Cornerஐ வந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இங்கு மேம்பாலம் ஒன்றை ராயபுரம் சூரியநாராயணன் செட்டி தெருவிலிருந்து மன்னார்சாமி கோவில் தெரு, tollgate, ஆர்.கே. நகர் வரை கிட்டத்தட்ட 3 கி.மீ. பரப்பளவு வருகிறது.

நான் 2021ல் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வியின் மூலமாகக் கேட்டபோது, போக்குவரத்துச் செறிவு இல்லை என்கிற காரணத்திற்காக, அந்தக் கோரிக்கையை பிற்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தார்.

இன்றையதினம் மிக அதிகமான போக்குவரத்து இருக்கக்கூடிய ஓர் இடமாக அந்தப் பகுதி விளங்கி வருகிறது. ஏனென்றால், ஐந்து தொகுதியில் இருக்கக்கூடிய, திருவொற்றியூரில் இருக்கின்ற அனைத்து companyகளிலிருந்தும் வரக்கூடிய அனைவரும் அந்த வழியில்தான் வருகிறார்கள்.

எனவே, அதை அமைச்சர் நிறைவேற்றித் தருவாரா?

அமைச்சர் எ.வ.வேலு: அவர் சொல்கிற சாலை என்பது, போக்குவரத்து அதிகமாக உள்ள சாலைதான். பொதுவாக சாலை அமைக்கின்றோம் என்றால், ஐந்தாண்டு காலம் நிறைவடைந்த பின்பு தான் renewal செய்வதாக இருந்தாலும், விரிவுபடுத்துவதாக இருந்தாலும் செய்ய முடியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்வியை கோரிக்கையாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை அளிக்க முடியுமா என்பதைத் துறையின் சார்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கோடை வெயிலை முன்னிட்டு

திண்டிவனம் நகராட்சியில் 9 இடங்களில் நீர்மோர்பந்தல்கள்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி பழங்களை வழங்கினார்!

திண்டிவனம், ஏப். 16 -

கோடை வெயிலை முன்னிட்டு திண்டிவனம் நகராட்சியில் 9 இடங்களில் அமைக்கப்பட்ட நீர் மோர்பந்தல்களை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்று திறந்து வைத்து பொது மக்களுக்கு தர்பூசணி, பழங்களை வழங்கினார்.

கோடை வெயிலை முன்னிட்டு பொதுமக்கள் தாகம் தீர்க்கும் வகையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட வேண்டும் என திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்உத்தரவிட்டார். இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் பல்வேறு பகுதிகளில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் திண்டிவனம் நகராட்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே. பி .ரமேஷ் ஏற்பாட்டில் மரக்காணம் சாலை திண்டிவனம் தீயணைப்பு நிலையம் அருகிலும்,திண்டிவனம் மேம்பாலம் பழைய காவல் நிலையம் அருகிலும்,பழைய இந்திரா காந்தி பேருந்து நிலையம் அருகிலும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.டி. பாபு ஏற்பாட்டில் காந்தி சிலை அருகிலும், திண்டிவனம் நகர இளைஞரணி அமைப்பாளர்,திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் சதீஷ் ஏற்பாட்டில் செஞ்சி சாலையிலும் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. இதே போல் திண்டிவனம் நகர மன்றம் சார்பில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் திண்டிவனம் மேம்பாலம் தபால் நிலையம் எதிரிலும், தீர்த்த குளம் அருகிலும் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. மாவட்ட தொண்டர் அணி சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தொண்டர் அணி தலைவர் பிர்லா செல்வம் ஏற்பாட்டில் வ. உ. சி. திடல் அருகிலும், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ராஜசக்தி ஏற்பாட்டில் திண்டிவனம் சாலையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டுஇதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு திண்டிவனம் நகராட்சியில் 9 இடங்களில் அமைக்கப்பட்ட நீர், மோர் பந்தல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர் வெள்ளரிக்காய் கூல்ட்ரிங்ஸ் தர்பூசணி பழங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ரமணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்ஆனந்த்,நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன், நகர மன்ற உறுப்பினர்கள் பாஸ்கர், ரேகா நந்தகுமார், மாவட்டப் பிரதிநிதி வி. எஸ். முருகன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி என்.எல்.சி ரகசிய வாக்கெடுப்பு, சங்க அங்கீகார தேர்தலில், போட்டியிடுவதற்காக தற்போது அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக உள்ள தொ.மு.ச, வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக, தந்தை பெரியார் சிலை அருகில் இருந்து வாகன பேரணியாகப் புறப்பட்டு , பேரறிஞர் அண்ணா சிலை, முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை, அண்ணல் அம்பேத்கர் சிலை, பெருந்தலைவர் காமராஜர் சிலை, அன்னை இந்திரா காந்தி சிலை ஆகிய தலைவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, வட்டம் 24 விருந்தினர் இல்லத்தில் மண்டல தொழிலாளாளர் ஆணையர் டாக்டர் நரசய்யாவிடம் , தொ.மு.ச. தலைவர் பா.திருமாவளவன், பொதுச் செயலாளர் என்.பாரி, பொருளாளர் ஆர்.ஐயப்பன், அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு நகர கழக செயலாளர் வி .குருநாதன் ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில்

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பட்டிமன்றம்!

தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் சிறப்புரை! மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஏப். 17-

பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பட்டிமன்றம் நடைபெறுகிறது. இந்த பட்டிமன்றத்தில் தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., உத்தரவிற்கிணங்க, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், நாளை (18.04.2025 - வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணியளவில் பெரம்பலூர், எளம்பலூர் சாலையில் உள்ள கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டப த்தில் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இர.இராகவி வரவேற்புரையில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் தமிழ்.கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ம. தமிழ் வேந்தன், பா.ரினோ பாஸ்டின், அ.இளையராஜா ஆகியோர் முன்னிலையில், நடைபெறும் பட்டிமன்றத்தை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து சிறப்புரை யாற்றுகிறார். இதில் கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். பிறந்தநாள் விழா காணும் திராவிட மாடல் முதல்வரின் ஆகாயம் அளாவிய புகழுக்குக் காரணம் முத்தான சாதனைகளா? வித்தான இலட்சியங்களா? எனும் பட்டிமன்றத் தலைப்பில் தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு நடுவராக இருந்து சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் முனைவர்.மானசீகன், கவிஞர்.மில்லர் மண்டேலா ஆகியோர் வித்தான இலட்சியங்களே எனும் தலைப்பிலும், பேரா.முனைவர்.பு.சி.கணேசன், முனைவர்.இராம.பூதத்தான் ஆகியோர் முத்தான சாதனைகளை எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மண்டலவாடியில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழுக்கான BLA2, BLC மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் க.உமாகன்ரங்கம், தொகுதி தேர்தல் பார்வையாளர் தாமரைச் செல்வன், ஆ.சம்பத்குமார், மு.க.அருள்நிதி, பொன்னுசாமி, வைரமணி, செந்தில்குமார், முருகன் மற்றும் BLA2, BLC, கிளைக் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.